## நில நிர்வாகத்துறை

அனுப்புநர்

திரு.சீ.நாகராஜன், இ.ஆ.ப.,
நில நிர்வாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
(இணைப்புகளுடன்)

எப்3/803480/2020, நாள் 30.7.2021

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம் - இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கியது - சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களை வட்ட/கிராம வருவாய் ஆவணங்கள் மற்றும் தமிழ்நில இணையதள ஆவணங்களில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் பதிவு செய்தல் குறித்து வழிகாட்டுதல் மற்றும் தெளிவுரைகள் வழங்கப்படுதல் - குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.34, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில முடிவு 3(1) பிரிவு, நாள் 13.1.2021.
2. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை ந.க.எண். ஆ1/28676/2020, நாள் 28.6.2021.

//////

பார்வையில் கண்ட அரசாணை மற்றும் கடிதத்தின் பால் தங்களின் கனிவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2) பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் ஆதிதிராவிட நலத்துறையினரால் நில எடுப்பு செய்யப்பட்டு இலவச வீட்டுமனை ஒப்படை பெற்ற பயனாளிகளில் நிபந்தனைக்காலம் முடிவுற்ற மற்றும் முடிவுறாத நேர்வுகளில் கிராம/வட்ட வருவாய் ஆவணங்களில் மற்றும் தமிழ் நிலம் இணையதள இணையவழி சிட்டாவில் பதிவுகள் மேற்கொண்டு பட்டா வழங்க ஏதுவாக தெளிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டு ஆணையிடப்பட்டன. அதனை தொடர்ந்து பார்வை 2ல் கண்ட ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரின் கடிதத்தில் மேற்படி அரசாணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் குறிப்பிட்ட காலத்திற்குள் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3) மேற்கண்ட அரசாணையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரால் ஏற்கனவே நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களில் வீடுகட்டி குடியிருப்போருக்கு பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் தெரிவித்தவாறு இணைய வழி பட்டா வழங்கும் பொருட்டு முதற்கட்டமாக மேற்படி நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களை நில உடைமை மேம்பாட்டு திட்ட அ-பதிவேடு மற்றும் தமிழ்நில இணைய அ-பதிவேட்டில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் பதிவு செய்வது தொடர்பாக கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

Scanned by CamScanner

✓ மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகியோரிடமிருந்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்கள் குறித்த விபரங்களை புல எண்கள் வாரியாக இணைப்பு I-ல் காணும் படிவத்தில் அட்டவணைப்படுத்த வேண்டும்.

✓ மேற்படி இனங்களுள் ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் நில எடுப்பு செய்யப்பட்ட அனைத்து புல எண்களும் நில உடைமை மேம்பாட்டு திட்ட அ-பதிவேடு மற்றும் தமிழ்நில இணைய அ-பதிவேட்டில் 'அரசு புறம்போக்கு' வகைப்பாட்டிலும், குறிப்பு கலத்தில் நேர்வுகளுக்கேற்ப 'ஆதிதிராவிடர் நத்தம்', 'பிற்படுத்தப்பட்டோர் நத்தம்' என்று மட்டுமே பதிவுகள் இடம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறன்றி, வேறு வகைப்பாட்டிலோ (ரயத்து நன்செய்/புன்செய்), அல்லது குறிப்பு கலத்தில் வேறு பெயர்களிலோ (ஆதிதிராவிடர் காலனி, சேரி, தனிநபர்களின் பெயர்கள் போன்றவை) பதிவுகள் இருப்பின் (நில எடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்து நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் தடையாணைகள் உள்ள இனங்களை தவிர்த்து) அதனை மாவட்ட ஆட்சியர் மூலமாக தனி செயல்முறை ஆணைகள் பிறப்பித்து தமிழ்நில இணையதளத்தில் உரிய வழிமுறைகளை பின்பற்றி, சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் மூலமாக மேலே குறிப்பிட்டவாறு பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட அ-பதிவேட்டிலும் மேற்கண்ட மாறுதல்களை உள்ளீடு செய்ய வேண்டும்.

✓ உயர் இழப்பீட்டுத் தொகை கோரி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் சார்ந்த புல எண்களுக்கும் மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி கிராம /இணையவழி அ-பதிவேட்டில் உரிய மாறுதல்கள் செய்யப்பட வேண்டும்.

✓ மேற்கண்ட பணியினை எதிர்வரும் 6-8-2021-க்குள் முடித்து அதனை இணைப்பு -II-ல் கண்டுள்ள படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

✓ அதன்பின்னர் மேற்படி புலங்களில் வீடுகட்டி குடியிருந்து வரும் நபர்களின் விபரங்களை சேகரிப்பது தொடர்பாகவும், பிரத்யேக இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்து இணையவழி பட்டா வழங்குவது தொடர்பாகவும் உரிய வழிகாட்டுதல்கள் தனியே விரைவில் வெளியிடப்படும்.

எனவே மேற்கண்ட பணி தொடர்பாக அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கி உரிய காலத்திற்குள் இப்பணியினை நிறைவு செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-சீ.நாகராஜன்
நில நிர்வாக ஆணையர்

நகல்

1. அரசு முதன்மைச் செயலர்,
   வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை - 9.

Scanned by CamScanner

2. அரசு முதன்மைச் செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச்செயலகம், சென்னை - 9.

3. அரசு செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகவும்
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.

4. இயக்குநர்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

5. ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

6. இயக்குநர்,
பழங்குடியினர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை -5.

7. இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

(5, 6, 7) தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட அளவிலான அலுவலர்களை மேற்கண்ட இனம் தொடர்பான நடவடிக்கையில் பங்கு பெறவும் சம்மந்தப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்களை அளிக்கவும் அறிவுறுத்த வேண்டப்படுகிறது.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்
30/07/2021

ஏ.சு
30/7/2021.

Scanned by CamScanner

# இணைப்பு -I

**(இதில் நில எடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்து நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் மற்றும் தடையாணை உள்ள இனங்களை தவிர்க்க வேண்டும்)**

| வ. எண். | மாவட்டம் | வட்டம் | கிராமம் | நிலஎடுப்பு தீர்ப்பாணை எண் மற்றும் நாள் | புல எண். | நிலஎடுப்பு செய்யப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்) (0.10.54 ஹெக் என்ற வடிவத்தில் குறிப்பிடவும்) | நில உடைமை மேம்பாட்டு திட்ட அ-பதிவேட்டின்படி | | தமிழ்நில இணைய அ-பதிவேட்டின்படி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வகைப்பாடு | குறிப்புகல விபரம் | வகைப்பாடு | குறிப்புகல விபரம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |

Scanned by CamScanner

## இணைப்பு - II

**(இதில் நில எடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்து நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் மற்றும் தடையாணை உள்ள இனங்களை தவிர்க்க வேண்டும்)**

| மாவட்டத்தின் பெயர் | துறையின் பெயர் | சம்பந்தப்பட்ட துறையினரால் நில எடுப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம் (ஹெக்டேரில்) | நில எடுப்பு செய்யப்பட்ட மொத்தப்பரப்பில் அரசு புறம்போக்கு என பதிவு செய்யப்பட்ட பரப்பு (ஹெக்டேரில்) | | மேற்கண்ட பரப்பில் ‘அரசு புறம்போக்கு’ வகைப்பாட்டில் மாறுதல் செய்யப்படாத பரப்பு (ஹெக்டேரில்) | மாற்றம் செய்யப்படாத தற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | நில உடைமை மேம்பாட்டு திட்ட அ-பதிவேட்டின்படி | இணையவழி அ-பதிவேட்டின்படி | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | | | | | |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | | | | | |

Scanned by CamScanner